Judicial Form No.60
CALENDAR AND JUDGMENT
(For use in cases whether there are more accused persons than one)
District of Tenkasi
Calendar of cases tried by the Judicial Magistrate of Tenkasi.

| Date of offence | Date of Report of complaint | Remand or surrender of accused | Release on bail | Commenc e ment of trial | close of trial | Sentence of order |
|---|---|---|---|---|---|---|
| 15.07.2015 | 15.07.15 | 13.08.2024 | 13.08.2024 | 19.07.24 | 09.06.26 | 17.06.26 |
| C.S.D. 15.09.15 | Explanation of Delay and Remarks: NIL | | | | | |
| C.S.F.D.13.04.23 | | | | | | |
| D.Cogni.17.04.23 | | | | | | |
| A.P.D. 19.07.24 | | | | | | |

Judgment in CC 448/2023 on the file of the Judicial Magistrate of Tenkasi.

Complainant: The Sub Inspector of Police, Sendamaram P.S in Cr.No.234/2015

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| 1)Gopal and 4 others | – | – |

| Caste or Religion | Calling | Residence | Police Station |
|---|---|---|---|
| Hindu | Coolie | Valasai | Sendamaram |

**Offence** : Section 147, 294(b), 323 IPC, Sec.4 of TNPHW Act
**Sentence** : A1 is found not guilty Sec.147, 294(b) IPC, A3 is found not guilty Sec.147, 294(b), 323 IPC and Sec.4 of TNPHW Act, A2, A4 are found not guilty Sec.147, 323 IPC and Sec.4 of TNPHW Act, A5 is found not guilty Sec.147, 323 IPC and the accused are acquitted Sec.248(1) of Crpc.,

MUTHU LAKSHMI
Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.06.17 11:42:43 +0530

Judicial Magistrate,
Tenkasi.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை: திருமதி.எஸ்.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் ஜுன் திங்கள் 17 ம் நாள் புதன்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 448/2023
CNR.No.TNTS02-001527-2023

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
சேர்ந்தமரம் கா.நி.கு.எண் 234/2015 ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

1. கோபால்,
த.பெ.பாண்டி,
சக்கம்மாள் கோவில் தெரு,
வலசை

2. பழனி,
த.பெ.பாண்டி,
சக்கம்மாள் கோவில் தெரு,
வலசை

3. லிங்குசாமி,
த.பெ.பாண்டி,
சக்கம்மாள் கோவில் தெரு,
வலசை

4. குமார்,
த.பெ.பாண்டி,
சக்கம்மாள் கோவில் தெரு,
வலசை

5. சுப்புலெட்சுமி,
க.பெ.லிங்குசாமி,
சக்கம்மாள் கோவில் தெரு,
வலசை ... எதிரிகள்

இவ்வழக்கு கடந்த 17.04.2023 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.தங்கதுரை அவர்கள்

ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

## <u>தீர்ப்புரை</u>

**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u> –**

15.07.2015 ம் தேதி காலை 06.00 மணிக்கு வலசை சக்கம்மாள் கோவில் தெருவில் உள்ள சாட்சி.1 ன் வீட்டு முன்பு வைத்து பொதுயிடத்தில் வைத்து 1 ம் எதிரி, சாட்சி சுப்புராஜை பார்த்து ஏலே தாயோழி நேற்று இரவு என்னிடம் ஏன் சண்டை போட்ட எனக்கூறி அசிங்கமாக பேசி பிரச்சனை செய்த போது தடுக்க சென்ற சாட்சி.1 ஐ பெண்ணென்றும் பாராமல் பெண்மைக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் பொதுயிடத்தில் வைத்து 3 வது எதிரி ஏய் புண்ட மவளே, நீ எதுக்கு வார என அசிங்கமாக பேசி தலைமுடியை பிடித்து கீழே தள்ளி தலையில் சாதாரணகாயம் ஏற்படுத்தியும், 2 ம் எதிரி, சாட்சி.1 ன் வயிற்றில் மிதித்து சாதாரணகாயம் ஏற்படுத்தியும், 4 ம் எதிரி காலால் சாட்சி.1 ன் முதுகில் மிதித்து சாதாரணகாயம் ஏற்படுத்தியும், 5 ம் எதிரி காலால் சாட்சி.1 ன் விலாவில் மிதித்து சாதாரணகாயம் ஏற்படுத்திச் சென்றதாகவும், எனவே, 1,3 வது எதிரிகள் இதச பிரிவுகள் 147, 294(பி), 323 மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 ன் கீழும், 2,4 வது எதிரிகள் இதச பிரிவுகள் 147, 323 மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 ன் கீழும், 5 வது எதிரி இதச பிரிவுகள் 147, 323 ன் கீழும் குற்றம் புரிந்துள்ளதாக எதிரிகள் மீது சேர்ந்தமரம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207 ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரிகளிடம் குற்றம் குறித்து வினவியபோது அவர்கள் குற்றத்தினை மறுத்துள்ளார்கள். இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிரிவு 240(1) கு.வி.மு.ச.வின் படி 1 வது எதிரி இதச பிரிவுகள் 147, 294(பி)ன் கீழும், 3 வது எதிரி இதச பிரிவுகள் 147, 294(பி), 323 மற்றும் தமிழ்நாடு பெண்கள்

வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழும், 2,4 வது எதிரிகள் இதச பிரிவுகள் 147, 323 மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழும், 5 வது எதிரி இதச பிரிவுகள் 147, 323ன் கீழும் குற்றச்சாட்டு வனைந்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் கீழ் அதனை விளக்கி வினவியபோது அவர்கள் தாங்கள் குற்றவாளி இல்லை என்று மறுத்துரைத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில், எதிரிகளுக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 7 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு –**

கடந்த 15.07.2015ம் தேதி 16.00 மணிக்கு சுடலைமுத்து முதல்நிலைக் காவலர் நிலையப் பொறுப்பில் இருந்த போது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பொன்மாரி என்பவரிடம் புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண்.234/2015, இதச பிரிவுகள் 147, 294(b), 323 மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 மற்றும் முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.4 என்றும், பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி 15.07.2015ம் தேதி 19.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் திருமலைராஜ் மற்றும் ராமசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர், அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதாகவும், பின்னர் சம்பவ சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் தலைமறைவான குற்றவாளிகள் என குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் அகிலாண்டபாரதி என்பவரை விசாரித்து காயச்சான்று அ.சா.ஆ.7 பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்பு தனது புலன்

விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிரான சங்கதிகளை எதிரிகளிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரிகள் பொய்ச்சாட்சி என்று கூறினார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா ? என்று வினவிய போது, எதிரிகள் சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், 1வது எதிரி இதச பிரிவுகள் 147, 294(பி)ன் கீழும், 3வது எதிரி இதச பிரிவுகள் 147, 294(பி), 323 மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழும், 2,4வது எதிரிகள் இதச பிரிவுகள் 147, 323 மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழும், 5வது எதிரி இதச பிரிவுகள் 147, 323ன் கீழும் உள்ள குற்றச்சாட்டானது அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

**<u>8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –**

எதிரிகள், அ.சா.1யை அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், மேற்படி குற்றச்சாட்டானது அ.சா.1 முதல் அ.சா.5 வரையுள்ள சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

**<u>9. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –**

அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றும், எனவே, புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன்

விசாரணை செய்யாமலேயே எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, எதிரிகளுக்கு எதிரானக் குற்றங்கள் எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரிகளை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**<u>10. தீர்வு</u> –**

15.07.2015 ம் தேதி காலை 06.00 மணிக்கு வலசை சக்கம்மாள் கோவில் தெருவில் உள்ள சாட்சி.1 ன் வீட்டு முன்பு வைத்து பொதுயிடத்தில் வைத்து 1 ம் எதிரி, சாட்சி சுப்புராஜை பார்த்து ஏலே தாயோழி நேற்று இரவு என்னிடம் ஏன் சண்டை போட்ட எனக்கூறி அசிங்கமாக பேசி பிரச்சனை செய்த போது தடுக்க சென்ற சாட்சி.1 ஐ பெண்ணென்றும் பாராமல் பெண்மைக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் பொதுயிடத்தில் வைத்து 3 வது எதிரி ஏய் புண்ட மவளே, நீ எதுக்கு வார என அசிங்கமாக பேசி தலைமுடியை பிடித்து கீழே தள்ளி தலையில் சாதாரணகாயம் ஏற்படுத்தியும், 2 ம் எதிரி, சாட்சி.1 ன் வயிற்றில் மிதித்து சாதாரணகாயம் ஏற்படுத்தியும், 4 ம் எதிரி காலால் சாட்சி.1 ன் முதுகில் மிதித்து சாதாரணகாயம் ஏற்படுத்தியும், 5 ம் எதிரி காலால் சாட்சி.1 ன் விலாவில் மிதித்து சாதாரணகாயம் ஏற்படுத்திச் சென்றதாகவும், எனவே, போலிசாரிடம் நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்ததாகவும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

11. எதிரிகளின் மீதான குற்றச்சாட்டானது அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்று பார்க்கும் போது, புகார்தாரரான அ.சா.1 பொன்மாரி, தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், தன் ஊர்க்காரர்கள் என்றும், சாட்சிகள் ஜக்கம்மாள், சுப்புராஜ், வெள்ளத்துரை, மல்லம்மாள் ஆகியோர்களை தெரியும் என்றும், தான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், கடந்த 11 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகளுக்கும் தனக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டதாகவும், தங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்து கொண்டதாகவும், தான் தடுமாறி கீழே விழுந்ததில் தனக்கு காயம் ஏற்பட்டதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 தன்னுடையதுதான் என்றும், புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று தனக்கு தெரியாது என்றும், எதிரிகள் தன்னை அசிங்கமாக பேசவில்லை, அடித்துக்

காயப்படுத்தவில்லை என்றும், தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளதாகவும், வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 ஜக்கம்மாள், தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும், தன் பக்கத்து வீட்டுக்காரர்கள், அ.சா.1 பொன்மாரி தன் மகள் என்றும், சாட்சிகள் சுப்புராஜ், வெள்ளத்துரை, மல்லம்மாள் ஆகியோர்களை தெரியும் என்றும், இந்த வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், கடந்த 11 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகளுக்கும் தனக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டதாகவும், தங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்து கொண்டதாகவும், தான் தடுமாறி கீழே விழுந்ததில் தனக்கு காயம் ஏற்பட்டதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கைரேகை அ.சா.ஆ.2 தன்னுடையதுதான் என்றும், புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.3 வெள்ளத்துரை, தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், தன் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றும், அ.சா.1 பொன்மாரி தன் மகள், அ.சா.2 ஜக்கம்மாள் தன் மனைவி என்றும், சாட்சி சுப்புராஜ் என்பவரை தெரியும் என்றும், அவர் இறந்துவிட்டார் என்றும், இந்த வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. அ.சா.4 மல்லம்மாள், தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், தன் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றும், அ.சா.1 பொன்மாரி தன் சித்தி, அ.சா.2 ஜக்கம்மாள் தன் பாட்டி என்றும், அ.சா.3 வெள்ளத்துரை தன் தாத்தா என்றும், சாட்சி சுப்புராஜ் என்பவரை தெரியும் என்றும், அவர் இறந்துவிட்டார் என்றும், இந்த வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை வைத்துப் பார்க்கும் போது, எதிரிகள், புகார்தாரரை அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தியதாக முன்னிலைப்படுத்தப்பட்ட அரசு தரப்பு வழக்கு வெகுவாக பாதிக்கிறது. மேற்படி அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான

சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட போதிலும் அரசு தரப்புக்கு ஆதரவாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை.

15. இந்த வழக்கில், அ.சா.5 தனது சாட்சியத்தில், அ.சா.1 னிடம் புகார் மனு பெறப்பட்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, புலன் விசாரணை முடித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது ஆகியவற்றை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் இருப்பதால் அ.சா.5 ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரிகள் குற்ற செயல்களில் ஈடுபட்டார் என்றோ அல்லது எதிரிகளுக்கு எதிரான அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று முடிவுக்கு வர முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. மேற்சொன்ன விவாதம் காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும் போது அரசு தரப்பில் 1 வது எதிரி இதச பிரிவுகள் 147, 294(பி)ன் கீழும், 3 வது எதிரி இதச பிரிவுகள் 147, 294(பி), 323 மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 ன் கீழும், 2,4 வது எதிரிகள் இதச பிரிவுகள் 147, 323 மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 ன் கீழும், 5 வது எதிரி இதச பிரிவுகள் 147, 323 ன் கீழும் உள்ள குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாட்டுக்கு அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகள் குற்றவாளி இல்லை என்று கண்டறிகிறது.

17. முடிவில், 1 வது எதிரி இதச பிரிவுகள் 147, 294(பி)ன் கீழும், 3 வது எதிரி இதச பிரிவுகள் 147, 294(பி), 323 மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 ன் கீழும், 2,4 வது எதிரிகள் இதச பிரிவுகள் 147, 323 மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 ன் கீழும், 5 வது எதிரி இதச பிரிவுகள் 147, 323 ன் கீழும் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

18. இவ்வழக்கின் 1,2,3,4,5 எதிரிகள் கடந்த 13.08.2024 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்கள்.

**<u>19. வழக்குச் சொத்து</u> –**

இந்த வழக்கில் சொத்துக்கள் தாக்கல் இல்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் ஜுன் திங்கள் 17ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI
Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.06.17 11:42:54 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**அரசு தரப்பு சாட்சிகள் –**

| | |
|---|---|
| அ.சா.1 | பொன்மாரி |
| அ.சா.2 | ஜக்கம்மாள் |
| அ.சா.3 | வெள்ளத்துரை |
| அ.சா.4 | மல்லம்மாள் |
| அ.சா.5 | திரு.அந்தோணி ஜெயராஜ், உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் –**

Judicial Form No.68

| SL. No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.1ன் கையொப்பம் | 26.05.2026 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.2ன் அறிவேன் சாட்சி கையொப்பம் | 26.05.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.2 | அசல் |
| 3 | புகார் வாக்குமூலம் | 09.06.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.5 | அசல் |
| 4 | முதல் தகவல் அறிக்கை | 09.06.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.5 | அசல் |
| 5 | பார்வை மகஜர் | 09.06.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.5 | அசல் |
| 6 | மாதிரி வரைபடம் | 09.06.2026 | அ.சா.ஆ.6 | அ.சா.5 | அசல் |
| 7 | காயச்சான்று | 09.06.2026 | அ.சா.ஆ.7 | அ.சா.5 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள் –** இல்லை.

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள் –** இல்லை.

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.06.17 11:43:00 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

<u>**குறிப்பு**</u> **:–**

1. எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்கள்.
2. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
3. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. சாட்சிகளை மூன்று நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.